பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை

25 08 2024 **SUNDAY** **12.40 PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இல்லந்தோறும் தேசியக்கொடி இயக்கம் நாட்டு மக்கள் அனைவரையும் ஒருங்கிணைத்ததாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. நக்சலைட் தீவிரவாதத்திற்கு விரைவில் முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

3. மத்திய அரசு ஊழியர்களின் அர்ப்பணிப்பை அங்கீகரிக்கும் வகையில் ஒருங்கிணைந்த ஓய்வூதியத்திட்டத்திற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல்.முருகன் கூறியுள்ளார்.

4. பழனி முத்தமிழ் முருகன் மாநாட்டில் லட்சக்கணக்கானோர் பங்கேற்றுள்ளதாக தமிழக அரசு கூறியுள்ளது.

5. ஆசிய ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Tanvi Patri** தங்கப்பதக்கம் வென்றார்.

<u>இனி விரிவான செய்திகள் ---</u>

**<<<<<<>>>>>>**

நாட்டு மக்கள் அனைவரையும் இல்லந்தோறும் தேசியக்கொடி இயக்கம் ஒருங்கிணைத்ததாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பான மக்களிடையே மனம் திறந்துபேசும் மன் கி பாத் நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர் இவ்வாறு கூறினார்.

<u>*(சவுண்ட் பைட் - மோடி (1) – 88 செகண்ட்ஸ்)*</u>

சுற்றுச்சூழலை பாதுகாக்க அனைவரும் பங்களிக்க வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

<u>*(சவுண்ட் பைட் - மோடி (2) – 85 செகண்ட்ஸ்)*</u>

அடுத்த மாதம் ஒன்றாம் தேதி முதல் 30-ஆம் தேதிவரை ஊட்டச்சத்து மாதம் கொண்டாடப்படுவதை சுட்டிக்காட்டிய அவர், குழந்தைகளின் ஆரோக்கியத்தில் ஊட்டச்சத்து முக்கிய பங்கு வகிப்பதாக கூறினார்.

<u>*(சவுண்ட் பைட் - மோடி (3) – 69 செகண்ட்ஸ்)*</u>

அடுத்த சில நாட்களில் பல்வேறு பண்டிகைகள் வரவுள்ளதை பற்றி குறிப்பிட்ட பிரதமர், அதற்காக வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்வதாகவும் கூறினார்.

<u>*(சவுண்ட் பைட் - மோடி (4) – 20 செகண்ட்ஸ்)*</u>

பாரிஸ் பாராலிம்பிக் போட்டியில் இந்தியா சார்பில் பங்கேற்பவர்களுக்கு அனைவரும் ஊக்கம் அளிக்க வேண்டும் என்றும் திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டார்.

<u>*(சவுண்ட் பைட் - மோடி (5) — 48 செகண்ட்ஸ்)*</u>

பிரதமர் ஆற்றிய உரையின் முழு தமிழாக்கம் இரவு 8 மணிக்கு சென்னை அகில இந்திய வானொலியில் மறுஒலிபரப்பு செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

**<<<<<<>>>>>>**

நக்சலைட் தீவிரவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு பல்வேறு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

சத்தீஸ்கர் மாநிலம் ராய்பூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நக்சலைட் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இதுவரை இல்லாத அளவிற்கு வளர்ச்சித் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

இப்பகுதிகளை சேர்ந்த இளையோர் வன்முறையை கைவிட்டுவிட்டு, வளர்ச்சிப்பணிகளில் தங்களை இணைத்துக்கொள்ள வேண்டும் என்றும் திரு அமித் ஷா கேட்டுக்கொண்டார்.

**<<<<<<>>>>>>**

மத்திய அரசு ஊழியர்களின் அர்ப்பணிப்பை அங்கீகரிக்கும் வகையில் ஒருங்கிணைந்த ஓய்வூதியத்திட்டத்திற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல்.முருகன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், மத்திய அரசு ஊழியர்களின் ஓய்வுக்கு பிறகு அவர்களின் நிதி பாதுகாப்பை இது உறுதி செய்வதாக குறிப்பிட்டுள்ளார்.

**<<<<<<>>>>>>**

தமிழகத்தின் பழனியில் நடைபெற்றுவரும் முத்தமிழ் முருகன் மாநாட்டில் லட்சக்கணக்கானோர் பங்கேற்றுள்ளதாக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு சேகர்பாபு கூறியுள்ளார்.

இந்த மாநாட்டில் பங்கேற்றுள்ள அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில் இவ்வாறு கூறினார்.

இந்த மாநாட்டையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முருகன் கண்காட்சி ஐந்து நாட்களுக்கு நீட்டிக்கப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

**<<<<<<>>>>>>**

ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலில் 100 சதவீத வாக்குப்பதிவை உறுதி செய்யும் வகையில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை தேர்தல் ஆணையம் நடத்தி வருகிறது.

இதன் ஒருபகுதியாக உதம்பூரில் நேற்று நடைபெற்ற பேரணியில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

இளையோர் ஜனநாயக நடவடிக்கைகளில் ஆர்வத்துடன் பங்கேற்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில், இந்த பேரணி நடைபெற்றது.

**<<<<<<>>>>>>**

பிரேசில் வெளியுறவு அமைச்சர் திரு **Mauro Vieira** நான்கு நாள் அரசு முறைப்பயணமாக இன்று புதுதில்லி வருகிறார்.

இருநாடுகளுக்கு இடையேயான கூட்டு ஆணையக்குழு கூட்டத்தில் நாளை மறுநாள் அவர் பங்கேற்கிறார்.

இருநாடுகளுக்கு இடையேயான உறவை மேலும் வலுப்படுத்துவதற்கு பிரேசில் வெளியுறவு அமைச்சரின் பயணம் உதவிடும் என்று அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

**<<<<<<>>>>>>**

ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், மகாராஷ்ட்ரா, குஜராத் ஆகிய மாநிலங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் இன்று அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

அஸ்ஸாம் மற்றும் மேகாலயா மாநிலங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளிலும் இன்று மிக கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தரப்பிரதேசம், கர்நாடகா, தெலங்கானா ஆகிய மாநிலங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

**<<<<<<>>>>>>**

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

ஆசிய ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Tanvi Patri** தங்கப்பதக்கம் வென்றார்.

சீனாவின் **Chengdu**-வில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் 15 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 22-20, 21-11 என்ற செட் கணக்கில், சீனாவின் **Nguyen Thi Thu Huyen** –வை வென்றார்.

**<<<<<<END>>>>>>**